# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.08.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9011/F/2023**

திரு.T.ஜெகதீஸ்வரன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட், .. பொது அதிகார அமைப்பு
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043.

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான விசாரணை 24.06.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 05.08.2026 அன்று நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நிலையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர், திருமதி.B.ராஜேஸ்வரி, உதவி மேலாளர் (வைப்புநிதி பிரிவு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், கோயமுத்தூர் அவர்கள் 04.08.2026 அன்று ஆணையத்தில் முன்கூட்டியே நேரில் ஆஜராகி மனுதாரரின் 6(1) மனுவில் கோரியுள்ள இனம் 2(அ) மற்றும் இனம் 2(ஈ) போன்றவற்றிற்கு 18.07.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாகவும் அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.M.பாலகிருஷ்ணன், துணை மேலாளர் (பணி ஓய்வு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயமுத்தூர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் தனது இரண்டு கால்களிலும் முழங்கால் மூட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளதால் மாநில தகவல் ஆணையத்திற்கு நேரடியாக வர இயலாத

நிலையில் உள்ளதாக தெரிவித்து அதற்கான ஆதாரங்களுடன் கூடிய கடிதத்தை தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு தற்போது தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதையும் மற்றும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை ஏற்றும் மனுதாரரின் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9011/F/2023**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043.

**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோயமுத்தூர்) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641043.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.T.ஜெகதீஸ்வரன்,
4/530, ஜீவாநகர் முதல் வீதி,
உடுமலைப்பேட்டை,
திருப்பூர்-642126.

Copy to file: KR/PA